**தலைப்பு 274 – அநுராதபுரம் மாவட்டச் செயலகம்.**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 29 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 19 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்தத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 94 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் 04 செலவு விடயங்களுக்கு ரூபா 99,541,000 ஆன தேறிய ஒதுக்கத்தை விஞ்சியதாக ரூபா 10,131,504 ஆன பொறுப்புக்களுக்கான கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | • 274-1-1-0-1002 இன் கீழ் தேவையான கடமைகளுக்காக மேலதிக நேர மற்றும் விடுமுறை நாட் சம்பளம் செலுத்த வேண்டி ஏற்பட்டமையால் இப் பொறுப்பு ஏற்பட்டிருந்தது.<br>• 274-1-1-0-1404 இன் கீழ் அநுராதபுரம் மாநகர சபையினால் வருடாந்த வரிப்பணம் மதிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்ததுடன் வரிப்பணக் கொடுப்பனவு கட்டாயமானது என்பதால் இப்பொறுப்பு கட்டாயமான ஒன்றாகும்.<br>• 274-1-1-0-2001 இன் கீழ் மாவட்டச் செயலகத்தின் மற்றும் பிரதேச செயலகங்களின் கட்டிடங்கள் மற்றும் உத்தியோகபூர்வ மனைகளில் தேவையான திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் இந்த மேலதிகப் பொறுப்பு ஏற்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிகை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | • 274-1-1-0-2104 இன் கீழ் பிரதேசச் செயலகங்கள் இரண்டில் புதிய கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததுடன் இப்பொறுப்பு 2020 ஆம் வருடத்தின் ஒதுக்கங்களில் தீர்ப்பதற்கு முடியாமற்போனது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் பொறுப்புக்களாக இனங்காணப்படாத 04 செலவு விடயங்களுக்கான ரூபா 10,176,691 ஆனது 2021 ஆம் வருடத்தில் செலுத்தப்பட்டிருந்தது. | • 274-1-1-0-1001 கெக்கிராவ பிரதேசச் செயலாளர் வெளிநாட்டுக் கல்விப் புலமைப்பரிசிலின் பின்னர் கடமைக்குத் திரும்பியதால் 2020 திசெம்பர் மற்றும் 2021 சனவரிக்கான சம்பளக் கொடுப்பனவு இதற்குக் காரணமாகும்.<br><br>• 274-1-1-0-1402 2020 திசெம்பர் மாதத்திற்கான தொலைபேசிப் பட்டியல்கள் நிதிக்கூற்றுக்களுக்கான தகவல்கள் பெறப்பட்டதன் பின்னர் பெறப்பட்டிருந்தமையால் பொறுப்புக்கள் இனங்காணப்படவில்லை.<br><br>• 274-1-1-0-1403 2020 திசெம்பர் மாதத்திற்கான மின்சாரப்பட்டியல் நிதிக்கூற்றுக்களுக்கான தகவல்கள் பெறப்பட்டதன் பின்னர் பெறப்பட்டமையால் பொறுப்புக்கள் இனங்கானப்படவில்லை.<br><br>• 274-1-1-0-2104 இது பிரதேசச் செயலகக் கட்டிடம் நிர்மாணித்தலுக்குரிய பற்றுச் சீட்டாகும். | வருடத்திற்கான செலவுகளுக்கான மதிப்பீடு செய்யப்பட்டு பொறுப்புக்கள் குறித்த வருடத்தின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |

## 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஒதுக்கங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகளுக்காக 37 அமைச்சுக்கள் மற்றும் 23 திணைக்களங்களினால் முறையே ரூபா 3210 மில்லியன் மற்றும் ரூபா 462 மில்லியனுக்கான மொத்தம் ரூபா 3,672 மில்லியன் ஒதுக்கங்கள் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அதில் மொத்தம் ரூபா 3,231 மில்லியன் பயன்படுத்தப்பட்டமையால் வழங்கப்பட்டிருந்த ஒதுக்கங்களில் ரூபா 441 மில்லியன் அதாவது நூற்றுக்கு 13 வீதம் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. 08 அமைச்சுக்களுக்காக மீளாய்வாண்டில் செலவு செய்யப்பட்டமையால் வழங்கப்பட்ட ஒதுக்கங்களில் நூற்றுக்கு 16 வீதத்திலிருந்து நூற்றக்கு 59 வீதம் வரையான ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 04 திணைக்களங்களுக்காக மீளாய்வாண்டில் செலவு செய்யப்பட்டமையால் வழங்கப்பட்ட ஒதுக்கங்களில் நூற்றுக்கு 19 வீதத்திலிருந்து நூற்றுக்கு 29 வீதம் வரையான ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | • சுகாதார மற்றும் உள்நாட்டு மருத்துவ சேவைகள் அமைச்சின் கீழ் செலுத்தப்படுகின்ற நீர் விநியோக முறைகளில் எதிர்ப்பார்க்கப்பட்டவாறு மின்சாரப்பட்டியல் தீர்க்கப்படுவதற்கு பட்டியல் சமர்ப்பிக்கப்படாமையால் இந்த ஒதுக்கம் சேமிக்கப்பட்டது.<br>• உயர் கல்வி தொழிநுட்ப மற்றும் கண்டுபிடிப்பக்கள் அமைச்சு, தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப அமைச்சு, நிதிப் பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சு, உள்ளகப்பாதுகாப்பு உள்நாட்டலுவல்கள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு மற்றும் திறன் அபிவிருத்தி, வேலை வாய்ப்பு மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சு 2020 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அமைச்சுக்கள் திருத்தங்களுக்கு உட்பட்டிருந்தமையால் இவ்வமைச்சின் கீழ் செலவுகள் செய்யப்படவில்லை.<br>• கொவிட் தொற்று நிலைமை காரணமாக இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழ் எதிர்பார்க்கப்பட்டவாறு இளைஞர் அதிகாரமளிக்கும் செயற்திட்டங்கள் நடாத்தப்பட முடியாமை. | நிதிப் பிரமாணம் 03 இன் பிரகாரம் செலவுகள் திட்டமிடப்படல் வேண்டும். |

- மனித வலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த பணம் முற்றாகப் பயன்படுத்துவதற்கு முடியாமல் போனது.
- காணி உபயோகக் கொள்கைத்திட்டமிடல் திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட பணம் கொவிட் தொற்று நிலைமை காரணமாக முற்றாகப் பயன்படுத்துவதற்கு முடியாமல் போனது.
- அரச தகவல் திணைக்களத்தினால் செலவு முகாமைத்துவம் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட செலவுகள் வருடத்திற்குள் ஏற்படாமை காரணமாக இச் சேமிப்பு ஏற்பட்டிருந்தது.
- அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் ஒதுக்கங்களில் பெறுகைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டபோது ரூபா 210,000 ஆன சேமிப்பு காணப்பட்டமை இதற்கான காரணம் ஆகும்.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரமாகக் காட்டப்பட்டுள்ளது.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2009 யூன் 22 ஆம் திகதிய 2/2009 ஆம் இலக்க மற்றும் 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 03/2020 ஆம் இலக்க ஒன்றினைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 2.2.2 ஆம் பந்தி | ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றுகின்ற கிழக்கு நுவரகம் பலாத பிரதேச செயலகத்தின் முகாமைத்துவ சேவையில் 07 அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்கள் 24 பேர் 06 | ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றுகின்ற அலுவலர்கள் இருப்பதாக உடன்படுகின்றேன். பின்வரும் காரணங்களின் அடிப்படையில் 05 வருடங்களுக்கு அதிகமான சேவை காலத்துடன் | சுற்றறிக்கையின் 2.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருடங்களிலிருந்து 12 வரையான காலப்பகுதியிலும் கெக்கிராவ பிரதேச செயலகத்தின் முகாமைத்துவ சேவையில் 03 அலுவலர்கள் 07 வருடங்களிலிருந்து 10 வரையான காலப்பகுதியிலும் திரப்பனே பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ சேவை அலுவலர்கள் 03 பேர் 06 வருடங்களிலிருந்து 08 வரையான காலப்பகுதியிலும் இப்பலோகம பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளர் அலுவலர்கள் 04 பேர் மற்றும் தகவல் தொழில்நுட்ப அலுவலர்கள் ஒருவர் 10 வருடங்களிலிருந்து 13 வரையான காலப்பகுதியிலும் இடம் மாற்றம் வழங்கப்படாமல் தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டிருந்தனர். | அலுவலர்கள் இடம் மாற்றப்படுவதற்கு முடியாதுள்ளது.<br>i. அலுவலர்கள் இடம் மாற்றங்களைக் கோரும் போது அதற்காக நியமிக்கப்பட வேண்டிய பொருத்தமான அலுவலர்கள் இல்லாமை.<br>ii. சேவை 05 வருடங்களுக்கு மேற்பட்ட போதிலும் பெரும்பாலான அலுவலர்களின் மனிதாபிமான காரணங்களினால் சில அலுவலர்களை இடம் மாற்றுவதற்கு முடியாமை.<br>iii. இடம் மாற்றலுக்காக அவர்களுக்கு வசதியான சேவை நிலையம் இல்லாமை | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 104(4) | திரப்பனே பிரதேசச் செயலகத்திற்கு உரித்தான கெப் வாகனமொன்று விபத்திற்குள்ளாகி ரூபா 431,712 செலவிடப்பட்டு திருத்தப்பட்ட போதிலும் விபத்துக்குப் பொறுப்பானவைரைக் கண்டறிவதற்கான பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. | இவ் விபத்திற்கான வழக்கு 2021.04.21 திகதிக்கு ஒத்தி வைக்கபட்டிருந்ததுடன் வழக்கு நிலைமை தொடர்பாக அறிக்கையொன்று வழங்குமாறு 2021.05.31 ஆந் திகதி திரப்பனே பொலிஸ் நிலைய அதிகாரிக்கு குறிப்பிடப்பட்டு அனுப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய முதியோர் செயலகத்தினால் அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்ட 2020 சனவரி 13 ஆந் திகதிய NSE/DVE/04/02/03/11 ஆம் இலக்கக் கடிதத்தின் பிரகாரம் தங்கள் பிரிவிற்குள் வசிக்கின்ற சிரேஷ்ட குடிமக்களுக்காக ஒரு தடவை மட்டும் செலுத்தப்படுகின்ற ரூபா 30,000 ஆன சுய தொழில் மானியம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 10 பிரதேச செயலகப் பிரிவுகளில் அச் செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | • மிகிந்தலே பிரதேசச் செயலாளர் பிரிவின் பயனாளிகளின் எதிர்பார்ப்பு இல்லாமையால் விண்ணப்பங்கள் சமர்பபிக்கப்படாமை மற்றும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக இச் செயற்திட்டத்தை நிறைவேற்ற முடியாது போனது.<br><br>• ஹொரவுப் பொத்தான, தலாவ, திரப்பனே, பலாகல, மஹவிலச்சிய மற்றும் கஹட்டகஸ் திகிலிய ஆன பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் கொரோனா நிலைமையினால் பொருத்தமான பயனாளிகளைத் தெரிவு செய்து செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முடியாமை.<br><br>• றம்பாவ பிரதேச செயலாளர் பிரிவில் தவறுதலாக அத் தகவல்கள் அனுப்பட்டடிராமையை ஏற்றுக்கொள்கின்றேன்.<br><br>• கெப்டிகொல்லாவ பிரதேச செயலாளர் பிரிவில் விண்ணப்பங்கள் தேசிய முதியோர் செயலகத்திற்கு அனுப்பட்டிருந்ததுடன் அதற்கான ஒதுக்கங்கள் 2020 ஆம் வருடத்தில் பெறப்படாமையினால் அச் செயற்திட்டம் செயற்படுத்துவதற்கு முடியாமை பிரதேச செயலாளரினால் அறிக்கையிடப்பட்டது. | தேசிய முதியோர் செயலகத்தால் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் தத்தமது பிரிவிற்குள் செயற்படுத்துவதற்குப் போதியளவு ஊக்கம் காட்டப்படல் வேண்டும். |

- இபலோகம பிரதேசச் செயலாளர் பிரிவில் விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்ட தனிபட்டோரினால் விண்ணப்பங்கள் பிழையின்றி பூரணப்படுத்தப்பட்டு செயலாளர்களுக்கு வழங்கப்படவில்லை.

**3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சுப்பர் கிராமம் மக்கள் பங்கேற்கும் கிராமிய அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் 05 பிரதேசச் செயலாளர் பிரிவுகளுக்கு அனுமதிக்கப்பட்ட ஒதுக்கங்கள் ரூபா 87,879,500 இல் செயற்படுத்தப்பட்ட 14 செயற்திட்டங்கள் முடிக்கப்படாத காரணத்தினால் எதிர்பார்க்கப்பட்ட பலன்கள் கிடைக்கப் பெறவில்லை.மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அதற்காக செலவிடப்பட்ட செலவுகள் ரூபா 7,505,919 ஆகும். | • கெப்டிக்கொல்லாவ - இப் பிரதேசத்தில் பலத்த மழை காரணமாக இச் செயற்திட்டம் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்படுவதற்கு முடியாத போதிலும் இற்றை வரையில் குறித்த செயற்திட்டங்கள் இரண்டை முடித்து எதிர்பார்த்த பலன்களைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>• மஹவிலச்சிய – ஹென்தேகம பசளைகள் களஞ்சியசாலை ஒன்று நிர்மாணிக்கும் செயற்திட்டம் நிர்மாணத்திற்காக பிரதேச அரசியல் அதிகாரங்களின் தாக்கத்தினால் இச் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தாமதமாகியதுடன் இற்றை வரையில் இச் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் முடிக்கப்படுவதற்குப் தேவைான நடடிவக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட வருடத்திற்கள் செயற்திட்டம் முடிக்கப்பட முடியுமான வகையில் பெறுகை திட்டமொன்று மற்றும் காலக் குறிப்பொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செய்றதிட்டம் செயற்படுத்தப்படல் வேண்டும். |

- திரப்பனே – மழை நிலைமை காணப்பட்டமையால் மற்றும் நெல் நிலங்கள் வழியாக விவசாயச் சாலை கடந்து செல்வதால் சாலையை அமைப்பதற்கான உபகரணம் மற்றும் இயந்திரங்களைப் பயன்படுத்துவது கடினம். சாலையின் குறுக்கே நெல் வயலின் ஒரு பகுதி இருந்ததால் மீதமுள்ள சாலையை நெல் வயல்களுடன் செயற்படுத்த முடியவில்லை.
- நொச்சியாகம – சட்டரீதியான சல்லிக்கல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு ஏற்பட்ட தாமதத்தினால் செயற்திட்டத்திற்குத் தேவையான சல்லிக்கல் அளவைக் குறித்த காலத்திற்கு வழங்க முடியாதிருந்தமை, வருட இறுதியில் காணப்பட்ட அடை மழை காரணமாக செயற்திட்டம் முடிக்கப்படுவதற்கு பாதகமாக இருந்த காரணத்தினால் 07 செயற்திட்டங்கள் முடிக்கப்பட்டிருக்கவில்லை.
- நச்சாதுவ – செயற்திட்டம் இலக்கம் 01-SG/C/22/264/RA/1846 ஆம் இலக்க செயற்திட்டத்தில் ரூபா 311,388.93 ஆன தொகைக்கான வேலைப் பகுதி முடிக்கப்படவில்லை. அதில் ஒப்பந்தக்காரினால் அடை மழை காரணமாக அவ் வேலைப் பகுதியை முடிப்பதற்கு இயலாமை பிரதேச செயலாளரினால் அறிக்கையிடப்பட்டது. செயற்திட்டம் இலக்கம் 02

| | | |
|---|---|---|
| | - SG/C/22/269/RA/325 ஆம் இலக்க செயற்திட்டத்தில் ரூபா 607,600.68 ஆன தொகைக்கு வேலைப் பகுதி முடிக்கப்பவில்லை. | |
| (ஆ) இபலோகம பிரதேச செயலாளர் பிரிவில் பலுகஸ்வேவ பண்ணைப் பிரிவில் சுய தொழில் பயிற்சி மத்திய நிலையமொன்று நிர்மானித்தலுக்காக ரூபா 1,980,000 செலவிடப்படடு கட்டிடமொன்றைக் கட்டுவதற்கு கொங்கிறீட் தூண்களில் ஒரு கூரை அமைக்கப்பட்டு கட்டிடத்தின் பாதி முடிக்கப்பட்டதுடன் செயற்திட்டம் முடியும் வரை எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காத மட்டத்தில் காணப்பட்டது. இத் திட்டத்திற்கான மொத்தக் கிரய மதிப்படு தயாரிக்கப்படாமையுடன் எதிர்வரும் வருடங்களில் இக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ஒதுக்கங்களை ஏற்படுத்தல் மேற்கொள்ளப்படாமையால் செலவிடப்பட்ட செலவுகள் விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | சுப்பர் கிராம அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் ''பலுகஸ்கமுவ பண்ணைப்பிரிவில் சுய தொழில் பயிற்சி மத்திய நிலையமொன்று நிர்மாணித்தல்'' எனும் பெயரில் இச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டது. மேலும் அதற்கு மேலதிகமாக இக்கிராமத்தில் நடைபெறும் பல்வேறு சங்கங்களின் கூட்டங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்தித் திட்டங்களுக்கு இக் கட்டிடத்தை பயன்படுத்தல். இச் செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் எதிர்பார்ப்படுகிறது. | மொத்தக்கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டும் மற்றும் செயற்திட்டத்தினை முடிக்கப்பதற்கு தேவையான ஒதுக்கங்கள் வருடாந்தம் ஒதுக்கப்பட வேண்டும். |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட பலன்களை (Out come) பெற்றுக் கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அபிவிருத்திச் செயற்திட்டம் செயற்படுத்தப்படும் போது அதிக ளவான பயனாளிகளுக்கு பலனளிக்கும் வகையில் செயற்திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய போதிலும் சுப்பர் கிராமம் மக்கள் பங்கேற்கும் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் கிழக்கு நுவரகம் பிரதேசச் செயலகப் பிரிவில் | கி.நு.ப – பி.செ.249 முதலாவது படி முதலாவது பாதை 100 மீற்றர் குட்டிக்கல் கைப்பற்றப்பட்டு புனரமைக்கப்பட்டமை.<br><br>இச் செயற்திட்டத்தின் சாத்தியக் கூறுகள் சமர்ப்பிக்கப்பட்டபோது பயனாளிகளின் எண்ணிக்கை குறைந்தளவில் இருந்த போதிலும் | செயற்திட்டம் செயற்படுத்தப்படும் போது அதிகமான பயனாளிகளின் எண்ணிக்கையை இலக்காகக் கொண்டு செயற்படுத்த வேண்டும். |

| | |
|---|---|
| செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டமொன்று இரண்டு பயனாளிகளை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அதன் மறைமுகப் பயனாளிகள் ஏராளமாகப் (அப்பாதையில் வசிப்பவர்களிடமிருந்து சேவைகளைப் பெற வருவதால்) பயன்படுத்துவதால் அச் சாலையை அபிவிருத்தி செய்வதற்கு முடியாதிருந்தது. |

**3.4 செயற்திட்டம் முடிக்கப்படாது கைவிடப்பட்டமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுப்பர் கிராமம் மக்கள் பங்கேற்புக் கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 07 பிரதேச செயலகங்களில் ரூபா 10,053,500 ஆன ஒதுக்கங்களில் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 12 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்படாமையால் கைவிடப்பட்டிருந்தன. | • மிகிந்தலை - இச் செயற்திட்டம் செயற்படுத்துவதற்குப் பொது மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தால் புதிய செயற்திட்டத்தின் திருத்தம் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான அனுமதி வழங்கப்படாமை.<br><br>• மதவாச்சி – கெலேகம குறுக்குப் பாதை புனரமைத்தல்.<br><br>இந்தச் செயற்திட்டத்திற்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்தக்காரால் திட்டம் இடைநிறுத்தபபட்டமை , தப்புவேவ மதகு மற்றும் ஒரு கால்வாயைப் புனரமைத்தல் பிரதேசத்தில் காணப்பட்ட பலத்த மழை காரணமாக தொட்டியின் நீர் மட்டம் அதிகரித்தமை.<br>• றம்பாவ – 02 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்திய றம்பாவ பிரதேச சபை அச் செயற்திட்டங்களுக்கான வேலைகளை ஆரம்பிக்கவில்லை. | குறிப்பிட்ட வருடத்திற்குள் செயற்திட்டங்கள்களை முடிக்க கூடிய வகையில் பெறுகைத் திட்ட மொன்று மற்றும் காலக் குறிப்பொன்றும் தயாரித்து அதன் பிரகாரம் செயற்திட்டம் செயற்படுத்தப்படல் வேண்டும். |

- கெப்பிட்டிக்கொல்லாவ – ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதல்ல

- நொச்சியாகம – ‘‘பஹாமுனேகம கிராமத்திற்கு ஒரு குழாய்க்கிணறு அமைத்தல்’’ அகழ்வாராச்சிக்கு 60 மீற்றர் பரிந்துரைக்கப்பட்ட போதிலும் அந்த அளவிற்கு அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படாமை.

- பதவிய – செயற்திட்டம் செயற்படுத்தும் காலப்பகுதியில் காணப்பட்ட அதிக மழை மற்றும் சல்லிக்கல் இல்லாமை.

- கலேன்பிந்துனுவேவ – செயற்திட்டத்திற்குத் தேவையான தாரைக் கண்டு பிடிப்பதற்கு முடியாமையால் மேற்கண்ட திட்டங்களை கைவிட வேண்டியிருந்தது.

## 3.5 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹேனபீமென் நிலையான வணிகப் பண்ணைச் செயற்திட்டத்திற்காக ரூபா 2,057,000 பெறுமதியான சூரியசக்தி நீர்ப்பம்பியொன்று கொள்வனவு செய்த போது போதியளவு போட்டியாளர்கள் காணப்படும் வகையில் மனுக்கோரல் மற்றும் பெறுகை ஆவணங்கள் தயாரித்தல் என்பன மேற்கொள்ளப்படாத காரணத்தால் அந்த நீர்ப்பம்பி ஒரு வழங்குனர் சமர்ப்பித்த விலையினை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட விடயம் உண்மையானது. எனினும், இந்த ஒதுக்கத்திற்கு விவரக் குறிப்புக்கள் விவசாயத் திணைக்கத்திடம் பெறப்பட்டு அதற்கான பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டது. இம் மனுக் கோரலின் போது ஏற்பட்ட தவறு காரணமாக இந்தப் பணிகள் இரண்டிற்காக விலை மனுக் கோரப்பட்டது. எனினும், தொழில்நுட்ப மதிப்பீட்டின் போது நீர்பம்பி வழங்கல் தொடர்பாக தனிப்பட்ட மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் போட்டி அடிப்படையில் வழங்குநர் தெரிவு செய்யப்படல் வேண்டும். |

### 3.6 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட தற்போது பிரதேசச் செயலாளரின் பொறுப்பில் காணப்பட்ட 02 வாகனங்கள் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட போதிலும் அவை 2015 யூலை 10 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 02/2015 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு நீக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் வாகனம் தொடர்பாக குறிப்பிட்ட பிரதேசச் செயலகங்களிலிருந்து தகவல்கள் பெறப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி அமைச்சின் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச காணிகள் அதிகாரச் சட்டத்தின் 196.1(vi) மற்றும் 215(6) ஆம் பிரிவின் பிரகாரம் அரசின் காணிகள் கிரனைட் அகழ்வாராய்ச்சி போன்ற வணிக நடவடிக்கைகளுக்காக வெளியார்களுக்கு வழங்கப்படும் போது இ.கொ.78 அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட வேண்டிய போதிலும் அந்த அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் காணியின் தற்போதைய சந்தைப் பெறுமதியில் நூற்றுக்கு 4 வீதம் வாடகையாக அறவிடப்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அநுராதபுர மாவட்டத்தில் 09 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 63 கிரனைட் அகழ்வாராய்சி அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுக்கு நிலத்தைப் பயன்படுத்தவதற்காக இ.கொ 78 அனுமதிப்பத்திரம் | அரசின் காணிகளில் கிரணைட் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளளப்படும் போது காணியைப் பயன்படுத்துவதற்கான இ.கொ 78 வருடாந்த அனுமதிப் பத்திரமொன்று வெளியிடப்பட்டு வருடாந்த வாடகை பணம் அறவிடுமாறு மாவட்டச் செயலாளரின் ANU/DIST/3/4/8//B/3 ஆம் இலக்க மற்றும் 2021.04.22 ஆம் திகதிய கடிதம் மூலம் அகைனத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | அரச காணிகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்படாததுடன் அந்த நிலத்தின் தற்போதைய சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய வாடகைப்பணம் நிலத்தைப் பயன்படுத்துபவர்களிடமிருந்து வருடம் 01 தொடக்கம் 14 வரையான காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1907 இன் 16 ஆம் இலக்க பாதுகாப்பு அதிகாரச் சட்டத்தின் 8(2) ஆம் பிரிவின் பிரகாரம் காணிகள் விடயப்பரப்பு அமைச்சருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம் பிரதேச செயலாளரின் கீழ் நிர்வகிக்கப்படும் அரசின் காணிகளில் கனிப்பொருட்களை சேகரித்தல் மற்றும் பெற்றுக்கொள்ளல் என்பவற்றுக்காக வர்த்தமானியின் குறிப்பிட்ட அளவிற்கு அரசின் கட்டணம் அறவிடப்படல் வேண்டும் எனினும். அநுராதபுர மாவட்டத்தில் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 08 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம் பெற்று வருகின்ற 55 கிரணைட் அகழ்வாராய்ச்சிகளில் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தினால் வெளியிடப்பட்ட கிரணைட் அகழ்வாராய்ச்சி அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கிரணைட் கியூப்களின் அளவு குறைவாகக் கணக்கிடப்பட்டமையால் 2012 ஆம் வருடம் முதல் 2019 ஆம் வருடம் வரையில் அரசின் கட்டண வருமானம் ருபா 295 மில்லியன் அறவிடப்படவில்லை. 2020 பெப்ரவரியிலிருந்து அநுராதபுர மாவட்டத்தில் அனைத்துப் பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கூறப்பட்ட அரச கட்டணம் அறவிடுதல் முற்றாகக் கைவிடப்பட்டிருந்தது. | அறவிடப்பட வேண்டிய கட்டணம் தொடர்பாக கவனமெடுக்கப்பட்டு அறிவுரை வழங்கப்படும் வரை 2009/05/06 ஆம் திகதிய 1600/18 ஆம் இலக்க விசேட வர்த்தமானி பிரகாரம் அரச கட்டணம் அறிவிடுதல் தற்காலிகமாக இடை நிறுத்துமாறு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. இது தொடர்பான கவனமெடுக்கப்பட்டதன் பின்னர் நிலப் பாவனைக்கான இ.கொ 78 வருடாந்த அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்டு வருடாந்த வாடகைப் பணம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அது தொடர்பாகப் பிரதேசச் செயலாளர்களுக்கு அறிவுறுத்ப்பட்டது. இ.கொ 78 அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் வருடாந்த வாடகைப் பணம் அறிவிடப்படும் போது அரசின் கட்டணம் அறிவிடப்படாமல் மற்றும் ஏதோ ஒரு வகையில் இ.கொ 78 அனுமதிப்பத்திரம் வெளியிடுதல் தாமதம் ஏற்பட்டால் மட்டுமே அரச கட்டணம் அறவிடுமாறு பிரதேசச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | 1600/18 அதிவிசேட வர்ததமானியின் பிரகாரம் கட்டணம் அறிவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாவட்டத்தில் 21 பிரதேச செயலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட பெண்கள் பணியக கடன் செயற் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களில் வருடத்திற்கும் அதிக காலம் தவணைப் பணம் அறவிடப்படாது காணப்பட்ட கடன்களின் கூட்டுத்தொகை ரூபா 5,530,631 ஆகும். கடன் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக பெறப்பட்ட ஒதுக்கங்களில் 18 பிரதேசச் செயலகங்களின் வங்கிக் கணக்குகளில் ரூபா 12,560,764 ஆன தொகையொன்று கடன் செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தப்படாது விளைவற்றதாகக் காணப்பட்டது. | இந்தக் கடன் கொடுப்பனவுகள் மீளச் செலுத்தாமைக்கு பெருமளவிலான பொருளாதார நெருக்கடிகள் காரணமாக இருந்தமை மற்றும் இன்னும் சிலர் பிரதேசங்களிலிருந்து வெளியேறியமை, இறத்தல் போன்ற காரணங்களினால் தவணைப்பணம் அறவிடப்படவில்லை. 2020 வருட ஆரம்பத்தில் தேர்தலொன்றுக்கான அறிவிப்பு மற்றும் வருடம் முழுவதும் காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமை காரணமாக எமது அதிகார சபைக் கூட்டம் நடாத்தப்படவில்லை தற்போது கூட்டப்படுகின்ற முதலாவது சபையினூடாக கடன் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | கடன் முன்மொழிவு முறைமையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய வகையில் செயற்திட்டம் செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | சுப்பர் கிராமம் மக்கள் பங்கேற்கும் கிராமிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நாச்சாதுவ பிரதேசச் செயலாளர் பிரிவில் மஹநெலும்பேவ மதகின் பக்கவாட்டுச் சுவரைப் பழுது பார்ப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,980,000 செலவிடப்பட்டிருந்ததுடன் நீர்ப்பாசன திணைக்களத்தினால் வழங்கப்பட்ட திட்டத்திற்கு மற்றும் பொறியியலாளரின் அறிவுரைகளுக்கு முரணாக அந் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நிர்மாணிக்கப்பட்டு 06 மாதங்கள் கடக்க முன்னர் கால்வாயின் பக்கவாட்டுச்சுவர் இடிந்து விழுந்ததால் செலவிடப்பட்ட முழுத்தொகையும் விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | இச் செயற்திட்டம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உரித்தான ஒரு செயற்திட்டமாகும். பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரின் DEI/NA/W/544 ஆம் இலக்க மற்றும் 2020.02.07 ஆம் திகதிய கடிதம் மற்றும் அனுப்பட்ட திட்டத்தின் பிரகாரம் ஊர் மக்களின் கோரிக்கை காரணமாகப் பிரதேசச் செயலகத்தினால் இச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் குறிப்பிட்ட செயற்திட்டம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பிரதேசச் செயலகத்திற்கு வழங்கப்பட்ட திட்டத்தின்படி மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | பொறியியலாளரின் அறிவுறுத்தல்களுக்கு முரணாகச் செயற்பட்ட அலுவல்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | புதிய சமுர்த்தி உரிமையாளர்களுக்கு மானியம் வழங்குவது தொடர்பான கிழக்கு நுவரகம் பலாத பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வின் பிரகாரம் 84 பயனாளிகளில் 46 பேர் அதாவது நூற்றுக்கு 55 வீதம் ஆனோர் உரிமைகளைப் பெறுவதற்குத் தகுதி | இந்த அலுவலகத்தினால் செய்யப்பட்டு வரும் கணிப்பீட்டின் பிரகாரம் நிவாரணம் வழங்குவதற்குப் பொருத்தமான பயனாளிகளின் முன்னுரிமையின் பிரகாரம் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. பிரதேசச் செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட பதிவேடு மாவட்டப் பணிப்பாளர் மூலம் | கணிப்பீட்டின் பிரகாரம் பொருத்தமானவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அற்றவர்களென்பது அவதானிக்கப்பட்டது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முன்னுரிமை பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர்களை விட்டு இறுதியில் இருக்கும் சிலருக்கு இந் நலன்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது. | தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. அதற்குள் தலைமை அலுவலகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்காக மட்டுமே உரித்துப் பத்திரம் இந்த அலுவலகத்திற்கு கிடைதத்தன் பின்னர் குறிப்பிட்ட பயனாளிகளுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் அதனைத் திருத்தும் அதிகாரம் பிரதேசச் செயலகத்திற்கு இல்லை. | |

## 4. நல்லாளுகை

### 4.1 பொது மக்களுக்கு சேவைகளை வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய துவரகம் பலாத பிரதேசச் செயலகப் பிரிவின் இலக்கம் 302, கட்டுகெலியாவ கிராம சேவகர் பிரிவில் வசிப்போருக்கு உரித்தான 01 ஏக்கர் 02 றூட் ஆன காணித்துண்டான்று மேற்குறிப்பிடப் பட்டவரின் விருப்பமின்றி அவரது மகனுக்குப் போலியான ஆவணமொன்று தயாரிக்கப்பட்டு 1997 செப்டெம்பர் 03 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. இக் காரணத்தினால் காணித் தகராறு ஒன்று ஏற்பட்டிருந்ததுடன் இது தொடர்பான பரிசோதனை நடாத்தப்பட்டு காணி ஆணையாளர் நாயகத்தினால் இக் கையளிப்பு சட்டரீதியாக இல்லாதிருந்தமை குறிப்பிடப்பட்டதுடன் 2017 ஆகஸ்ட் 09 இல் அத் தவறை திருத்துவதற்காக மத்திய நுவராகம் பலாத பிரதேச செயலாளருக்கு அறிவிக்கபட்டிருந்த போதிலும் அது இற்றை வரையில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக காணியின் 50 பேர்ச்களைத் தமது தாயரான திஸாநாயக்க முதியன்சேலாகே பியோமெனிகே என்பவருக்கு ஒப்படைப்பதற்கு ஜே.எம்.ஜி.எஸ் கருணாரத்ன என்பவர் ஒப்புக்கொண்டிருந்ததுடன் அதன் பிரகாரம் கையளிப்பதற்கான பதிவேட்டை பிரதேசச் செயலாளருக்கு சமர்ப்பிக்குமாறு ஜே..எம்.ஜீ.எஸ் கருணாரத்ன என்பவருக்கு அறிவுறுத்தப்பட்டது. குறித்த பதிவேடு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் கையளிப்பிற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அவர் இப் பிரச்சினையை தீர்ப்பதற்கு இது சிறந்த நடவடிக்கையாக இருக்குமென்பது அவதானிக்கப்பட்டது. | காணி ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் 03 பிரதேசச் செயலாளர் பதவிகள், 04 உதவிப பிரதேசச் செயலாளர் பதவிகள், 13 உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) பதவிகள் மற்றும் 15 நிர்வாக அதிகாரிகளுக்காள வெற்றிடங்கள் பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்பட்டன. | குறிப்பிட்ட வெற்றிடங்கள் காணப்பட்டதை ஏற்றுக்கொள்கின்றேன். இவ் வெற்றிடங்களுக்ளுகான பதவிகளை நியமிக்கும் அதிகாரம் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு மற்றும் ஒன்றினைந்த சேவைகள் நிர்வாகப் பணிப்பாளர்ருக்கே உண்டு. குறிப்பிட்ட வெற்றிடங்கள் தொடர்பாக மாதாந்தம் MISCO தரவு முறைமை மூலமும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் வெப் பக்கங்கள் மூலமாகவும் தரவுகள் அறிக்கையிடப்படும். அத்துடன் குறிப்பிட்ட வெற்றிடங்ளை நிரப்புமாறு கால்திற்குக் காலம் கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட வெற்றிடமாவுள்ள பதவிகளுக்கு அப்பணிகளில் பொருத்தமான அதிகாரிகளை ஈடுபடுத்தவதற்கு வேலைத்திட்டமொன்று போடப்பட்டுள்ளது. | தேவையான பதவியணியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |